Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 10, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 58

# கீழடியில் தமிழ்ப் பண்பாட்டை அறிய தொடர் ஆய்வு மேற்கொள்ளப்படும்

# நெல்லையில் ரூ.15 கோடி செலவில் அருங்காட்சியகம்

# முதல்வர் மு.க. ஸ்டாலின்

சென்னை, செப்டம்பர் 10 2021: நெல்லையில் ரூ.15 கோடி செலவில் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என, முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் ஒவ்வொரு துறை வாரியாக மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. இந்நிலையில், நேற்று (செப். 09) சட்டப்பேரவையில் சட்டப்பேரவை விதி எண்:110-ன் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

"தமிழர் நாகரிகம் பண்டைய நாகரிகம் என்பதற்கான அசைக்க முடியாத தொல்லியல் சான்றுகள் உள்ளன. இதை யாராலும் அசைக்கவோ, மறுக்கவோ முடியாது. சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெறும் அகழ்வாராய்ச்சி தற்போது உலக அரங்கில் கவனத்தை ஈர்த்திருக்கிறது. செங்கல் கட்டுமானம், தங்க அணிகலன்கள், பானைகள் உள்ளிட்டவை அங்கு கண்டறியப்பட்டுள்ளன.

கி.மு. 6-ம் நூற்றாண்டிலேயே தமிழர்கள் எழுத்தறிவு பெற்றவர்கள் என்பது தெரியவந்துள்ளது. கீழடி, கொற்கை, சிவகளை உள்ளிட்ட இடங்களில் தற்போது தொல்லியல் ஆய்வு நடைபெற்று வருகிறது. கி.மு. 6-ம் நூற்றாண்டுக்கு முன்பாகவே கொற்கை துறைமுகம் செயல்பட்டுள்ளது.

வெளிநாடுகளுடன் தமிழர்கள் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததும் தெரியவந்துள்ளது. ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் கடல் வணிகம், முத்து குளித்தல் எனப் பல விஷயங்கள் அகழாய்வில் தெரியவந்துள்ளது.

2018-ம் ஆண்டு நேரில் சென்று கீழடி அகழ்வாராய்ச்சிப் பணிகளைப் பார்வையிட்டேன். தமிழ்ப் பண்பாட்டை அறிய தொடர் ஆய்வு மேற்கொள்ளப்படும். அதன் தொடர்ச்சியாக, நெல்லையில் ரூ.15 கோடி செலவில் அருங்காட்சியகம் அமைக்கப்படும்". இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.





# தென்மேற்கு பருவக்காற்று காரணமாக 12 ந் தேதி வரை 5 நாட்களுக்கு மிதமான மழை

சென்னை, செப். 10 2021: தமிழ்நாட்டில் 12 ந்தேதி வரையில் 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளதாவது:ஞ

தென்மேற்கு பருவக்காற்று காரணமாக 12 ந் தேதி வரை 5 நாட்களுக்கு தமிழ்நாடு மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னையை பொருத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும்.



அதிகபட்ச வெப்பநிலை 35 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 டிகிரி செல்சியசை ஒட்டியிருக்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. மேலும் இன்றும் நாளையும் தென்கிழக்கு, மத்திய கிழக்கு, வங்க கடல் பகுதிகள் மற்றும் தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என தெரிவித்துள்ளது.

அதேபோல்,10 ந்தேதி முதல் 12 ந்தேதி வரை மத்திய வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்க கடல் பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் தூரத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

அரபிக்கடல் பகுதிகளைப் பொறுத்தவரை இன்று முதல் 12ஆம் தேதி வரை தென் மேற்கு மற்றும் மத்திய மேற்கு அரபிக் கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்லி இளம் பெண்அதிகாரி படுகொலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்

சென்னை, செப். 10 2021: சிபிஎம் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தனது அறிக்கையில் கூறியதாவது:- தலைநகர் டெல்லியில், சிவில் பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றிவந்த 21 வயதே ஆன இளம் பெண் கூட்டு பாலியல் வல்லுறவு செய்து குரூரமாகக் கொல்லப்பட்டுள்ளார். அவரது உடல்பாகங்கள் சிதைக்கப்பட்டு, 50 க்கும் மேற்பட்ட வெட்டு காயங்களோடு கண்டறியப்பட்டுள்ளது. இந்த குரூர படுகொலையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

கொல்லப்பட்ட இளம்பெண் அதிகாரி ஒரு சிறுபான்மை இஸ்லாமியர் என்பதையும் அவரது கொடூரமான கொலையில் காவல்துறையில் பணியாற்றும் ஒருவரும் உடந்தையாக இருந்திருக்கிறார் என்பதையும் அறியும்போது இது ஒரு திட்டமிட்ட வகுப்புவாத வெறியோடு நடத்தப்பட்டகொடூர கொலையே என்பதோடு, டெல்லி காவல்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்பாஜக ஒன்றிய அரசின் மோசமான தோல்வியையும் அம்பலப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.



படுகொலை செய்யப்பட்ட பெண் அதிகாரி மாவட்ட மாஜிஸ்திரேட் அலுவலகத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் லஞ்ச ஊழல் உள்ளிட்ட தவறுகளை தட்டிக் கேட்டதாலும், தவறிழைக்கும் அதிகாரிகளுக்கு ஒத்துழைக்க மறுத்ததாலுமே அவருக்கு இந்த நிலைநேர்ந்திருக்கிறது என்று அவரது பெற்றோர் குற்றம்சாட்டியுள்ளனர். இளம் வயது பெண்ணை இழந்து தவிக்கும் பெற்றோரது கண்ணீரையும், தலைநகரில் நடந்துள்ள இத்தகைய அதிர்ச்சிகரமான சம்பவத்தையும் ஒன்றிய உள்துறையோ அல்லது அதற்கு கீழ் இயங்கும் தில்லி காவல்துறையோ துளியும் கண்டுகொள்ளவில்லை என்பதோடு, இந்த கொலை குறித்த வழக்கை பதிவு செய்திடவும், குற்றவாளிகளை கண்டறிவதிலும் மிகவும் அலட்சியமாகவே நடந்து கொள்கிறது.

உள்துறையின் கட்டுப்பாட்டில் நேரடியாக சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படும் டெல்லியில் கடந்த ஜனவரி 2021 முதல் ஜூன் 2021 வரையிலான ஆறு மாதங்களில் மட்டும்பெண்களுக்கு எதிராக 833 பாலியல் வல்லுறவு குற்றங்களும், 1022 இதர வகையான குற்றங்களும் நடைபெற்றுள்ளன. இது கடந்த காலங்களை ஒப்பிடும் போது 43 சதவீதம் அதிகமாகும். சமூகத்தில் நிலவும் ஆணாதிக்க கண்ணோட்டமும், திட்டமிட்டு வளர்க்கப்படும் வகுப்புவாத வெறியுமே இத்தகைய குற்றங்கள் அதிகரிப்பதற்கான அடிப்படைகளாகும்.

இந்நிலையில் அரசியல் உள்நோக்கத்தோடும், அரசியல் சமரசங்களுக்கு இடமளிக்காத வகையிலும் இவ்வழக்கை உள்துறையும், டெல்லி காவல்துறையும் நேர்மையாக கையாள்வதோடு, வல்லுறவு மற்றும் கொலை குற்றவாளிகள், அதற்குப் பின்னால் இருந்தவர்கள் என அனைவரும் எவ்வளவு உயர்மட்டத்தில் இருந்தாலும் உடனடியாக கைது செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். நீதிமன்றத்தின் நேரடியான கண்காணிப்பிலான விசாரணையையும் உறுதி செய்திட வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு முழுமையான பாதுகாப்பு அளிக்கவேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலசெயற்குழு வலியுறுத்துகிறது. இந்த படுகொலையை கண்டித்து அனைத்து ஜனநாயக சக்திகளும் கண்டனக் குரலெழுப்ப வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள்கிறது.

# விநாயகர் சதுர்த்தி விவகாரத்தில், அரசின் உத்தரவில் நீதிமன்றம் தலையிட முடியாது என சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு தெரிவித்துள்து

சென்னை, செப். 10 2021: சென்னையை சேர்ந்த இல.கணபதி என்பவர், சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்றை தொடர்ந்துள்ளார். அதில் கடந்த 30-ஆம் தேதி, தமிழ்நாடு அரசு, பொது இடங்களில் விநாயகர் சிலை வைத்து வழிபடுவதற்கும், ஊர்வலமாக எடுத்து செல்வதற்கும் தடை விதித்து உத்தரவிட்டுள்ளதை சுட்டிக்காட்டி அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும், பொது இடங்களில் விநாயகர் சிலையை வைத்து வழிபடவும், ஊர்வலமாக எடுத்து செல்லவும் அனுமதிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த வழக்கு நீதிபதி அமர்வு, மத உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி மற்றும் நீதிபதி ஆதிகேசவலு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், குறைந்தபட்சம் 5 பேராவது அனுமதிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

பின் வழக்கை விசாரித்த உரிமைகளை பின்பற்ற, வாழ்வாதார உரிமை முக்கியமானது என்றும், பொதுநலன் கருதியே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும், அரசு பிறப்பித்துள்ள உத்தரவில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் கூறி வழக்கை முடித்து வைத்துள்ளது.

# தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் விநாயகர் சதுர்த்தி வாழ்த்து

புதுச்சேரி, செப்டம்பர் 10 2021: விநாயகர் வினைகளைத் தீர்ப்பவர் வெற்றிகளைத் தருபவர் விநாயகர் எளிமையான கடவுள் ,எளியவர்களின் வேண்டுதலுக்கு செவி சாய்க்கக்கூடிய இறைவன்.

இந்த விநாயகர் சதுர்த்தி பொதுமக்களுக்கு பாதுகாப்பை தருவதாகவும் அதே சமயம் மகிழ்ச்சி அளிக்க கூடியதாகவும் வருங்கால முன்னேற்றத்திற்கு வித்திடுவதாகவும் அமையட்டும். விநாயகர் அருளால் கொரோனா எனும் சவாலான சூழ்நிலையை தடுப்பூசி கொண்டு எதிர்க்கும் மன உறுதி கொண்டு இந்த விநாயகர் சதுர்த்தியை மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம்.பாதுகாப்பான உடல்நிலையும், சுய சார்பான நாட்டின் நிலையையும் அடைந்து நாட்டிலும்,வீட்டிலும் மகிழ்ச்சிபொங்க இந்த விநாயகர் சதுர்த்தி வழிவகுக்கட்டும்.

மேலும் புதுச்சேரியில் விநாயகர் சதுர்த்தி விழாவை பொதுவெளியில் கொண்டாட புதுச்சேரி அரசு கட்டுப்பாடுகளுடன் அனுமதி அளித்திருக்கும் நிலையில் அண்டை மாநிலங்களில் அதிகரித்து வரும் கொரோனா பரவலை கருத்தில் கொண்டு மக்கள் அனைவரும் அரசு விதித்துள்ள கொரோனா கட்டுப்பாட்டு நெறிமுறைகளை கட்டாயம் கடைபிடித்து, முகக்கவசம் அணிந்து, கூட்டம் கூடாமல் சமூக இடைவெளியை கடைபிடித்து பாதுகாப்பாக விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அனைவருக்கும் எனது விநாயகர் சதுர்த்தி நல்வாழ்த்துக்கள். என்று தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் விநாயகர் சதுர்த்தி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்கள்.



ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

நிருபர்கள் தேவை

தமிழகமெங்கும் காலையில் வெளிவரும்
ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழுக்கு
மாவட்டம். தாலுகா பகுதி நகர வாரியாக
அனுபவமுள்ள நிருபர்கள் தேவை
தொடர்புக்கு : 8148231942
hellomadrasdaily@gmail.com

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## மதுரையில் மேலமடை அருகே மஸ்தான்பட்டி கிராமத்தில் ஸ்ரீவிநாயகர் ஸ்ரீபாண்டி முனிஸ்வரர் சமயன்சாமி திருக்கோவில் மஹா அஷ்டபந்தன கும்பாபிஷேகம்



**மதுரை, செப்டம்பர் 10 2021: மதுரை மாவட்டம் மேலமடை அருகே மஸ்தான்பட்டி கிராமத்தில் பிரசித்திபெற்ற ஐந்து தலைமுறை பராம்பரியமிக்க அருள்மிகு ஸ்ரீவிநாயகர் ஸ்ரீபாண்டி முனிஸ்வரர் சமயன்சாமி திருக்கோவில் மஹா அஷ்டபந்தன கும்பாபிஷேகம் கோவில் பூசாரிகள் செல்வராஜ் அய்யாவு பசுபதி பூசாரி மலையாண்டி ஜெயராமன் ஆகியோர் தலைமையில் வெகுவிமரிசையாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் ஆறுமுகம் மூர்த்தி அய்யாவு காசி பாண்டிராஜ் உள்ளிட்ட திருப்பணி குழுவினர் மற்றும் 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.**



**கடலூர்: கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவிலில் விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் அகில இந்திய தீண்டாமை ஒழிப்பு தலைவர் மனித உரிமைக் கட்சியின் தலைவரும் முன்னாள் எம்பி எம்எல்ஏ தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மறைந்த அய்யா எல் இளைய பெருமாள் அவர்களின் 16வது ஆண்டு நினைவஞ்சலி நகர செயலாளர் நாகராஜன் தலைமையில் சிறப்பு அழைப்பாளராக தொகுதி துணை செயலாளர் சக்திவேல் ராவணன் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செய்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய துணை செயலாளர் மெய் இளந்தமிழன் வானமாதேவிராஜா மற்றும் விடுதலை சிறுத்தை கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோவிட்-19 தடுப்பூசி மற்றும் தடுப்பு பணிகள் குறித்து ஆலோசனை



**கிருஷ்ணகிரி, செப்டம்பர் 10 2021: தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, 12.9.2021 கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாபெரும் கோவிட்-19 தடுப்பூசி முகாம் நடத்துவது குறித்து கொரோனா தடுப்பு பணிகள் குறித்தும் சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக தலைமை செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜெயச்சந்திர பானு ரெட்டி, ஆலோசனை மேற்கொண்டார் உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாய்சரண் தேஜஸ்வி, மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர.**



**கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலகங்களிவ் இயங்கி வரும் 9 அரசு இ-சேவை மையங்களில் 01/10/2021 முதல் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி. ஜெயச்சந்திர பானுரெட்டி தெரிவித்துள்ளார்.**

## ஃபிஸ்டம், நவீன தொழில்நுட்பம் அடிப்படையிலான ஹெச்.என்.ஐ வெல்த் துறையில் அடியெடுத்து வைக்கிறது!

*சென்னை, 10 செப்டம்பர் 2021 :* இந்தியாவின் முன்னணி வெல்த்-டெக் நிறுவனங்களில் ஒன்றான ஃபிஸ்டம், ஹெச்என்ஐ வெல்த் துறையில் அடியெடுத்து வகையில் ஃபிஸ்டம் பிரைவேட் வெல்த் என்ற நிறுவனத்தை தொடங்குவதாக அறிவித்துள்ளது. இதன் மூலம். உயர் முதலீட்டாளர்களின் தேவையை பூர்த்தி செய்யும் தொழில்நுட்பம் அடிப்படையிலான நிதி மற்றும் சொத்து மேலாண்மை துறையில் நுழைகிறது. இத்துறையின் மிகப் பெரிய ஜாம்பவானான அபிஜித் பாவேவுடன் கைகோர்த்து, ஃபிஸ்டம் பிரைவேட் வெல்த் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக அவரை நியமனம் செய்துள்ளது.

ஃபிஸ்டம் பிரைவேட் வெல்த் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு மியூச்சுவல் பண்ட், பிஎம்கள், ஏஐஎப்கள், பட்டியலிடப்படாத தனியார் பங்குகள், கடன் பத்திரங்கள், வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகள், காப்பீடு மற்றும் சர்வதேச தயாரிப்புகள் உள்ளிட்ட பல்வேறு வகையான முதலீட்டு தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்க உள்ளது. ஃபிஸ்டம் நிறுவனத்தின் இந்த புதிய நிறுவனம் அபிஜித் பாவே வழிகாட்டுதலிலும், குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு வகையான காப்புரிமை பெற்ற தயாரிப்புகளை அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. சந்தையில் உயர் முதலீட்டாளர்களின் கிடைக்க வேண்டிய சேவையில் ஏற்பட்டுள்ள இடைவெளியை நிரப்பும் வகையில் ஃபிஸ்டம் பிரைவேட் வெல்த் ஒரு பாலமாக செயல்படும். மேலும் மிகவும் ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த மேலாளர்களின் அர்ப்பணிப்புள்ள ஆதரவுடன் மிகவும் வலுவாக விளங்கும் தொழில் நுட்ப தளத்தில் தனது சேவையை விரிவாக்கம் செய்ய உள்ளது.

ஃபிஸ்டம் நிறுவனத்தின் இணை நிறுவனரும், சிஇஓவுமான எஸ். வி. சுப்ரமண்யா கூறுகையில், "பிரைவேட் வெல்த் பிரிவில் புதிய நிறுவனத்தை தொடங்குவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். மேலும், இத்துறையில் நன்கு நிரூபணமான அனுபவமும் நிபுணத்துவமும் வாய்ந்த அபிஜித் அவர்களை இத்துறையில் தலைமை ஏற்கவும் வரவேற்கிறோம். எங்களது மிகப் பெரிய முன்னெடுப்பு உத்திகளில் ஒன்றாக ஃபிஸ்டம் பிரைவேட் வெல்த் நிறுவனத்துடன் இணைந்து உயர் முதலீட்டாளர்கள் அவர்களது நிதி மேலாண்மை பயணத்தில் புதிய அனுபவங்களை வழங்குவதே எங்களது குறிக்கோளாகும்.

ஆற்றல் வாய்ந்த பாதுகாப்பான தொழில்நுட்ப உள்கட்டுமானத்தின் வாயிலாக, ஆய்வுப்பூர்வமான தகுதிவாய்ந்த மிகவும் தனிச்சிறப்பான நிதி மேலாண்மை சேவைகளை வழங்க நாங்கள் முயற்சித்து வருகிறோம். பல்வேறுபட்ட தேசங்களிலும் நிதி சேவைத் துறையில் பன்முக திறன் வாய்ந்த அபிஜித் அவர்களின் அனுபவத்துடன், உயர் முதலீட்டாளர்கள் தங்களுடைய முதலீட்டு பயணத்தில் உயரிய இலக்குகளை மிகவும் அழுத்தமான வர்த்தக செயல்பாடுகளுடன் வழங்கி உதவ முடியும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்" என்றார்.

ஃபிஸ்டம் பிரைவேட் வெல்த், தலைமை செயல் அதிகாரி அபிஜித் பாவே கூறுகையில், "ஃபிஸ்டம் போன்ற மிகவும் ஆற்றல்மிக்க நிறுவனத்துடன் எனது புதிய பயணத்தை தொடங்குவதில் மிகவும் ஆர்வமாக உள்ளேன். பிரைவேட் வெல்த் பிரிவில் ஒப்பீட்டளவில், குறிப்பாக இந்தியாவில் இரண்டாம், மூன்றாம் நிலை நகரங்களில் உள்ளடங்கிய மாபெரும் சந்தையை கொண்டுள்ளது, தொழில்நுட்பத்தை மையாகக் கொண்ட நமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளை கொண்டு சேர்க்க இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. ஆகவே உள்நாட்டு சந்தைகளில் இணைக்கப்படாத உயர் வகுப்பு வாடிக்கையாளர்கள் மட்டுமின்றி சர்வதேச அளவிலான வாடிக்கையாளர்களையும் உள்ளடக்கி ஃபிஸ்டம் பிரைவேட் வெல்த் தொடங்கப்பட்டுள்ளது " என்றார்.



**திருப்புவனம்: திருப்புவனம் அருகே பழையனூர் ஊராட்சிக்கு உட்பட்ட சங்கங்குளம் கிராமத்தில் வீற்றிருக்கும் பிரசித்தி பெற்ற நினைத்ததை நிறைவேற்றிக் கொடுக்கும் அருள்மிகு ஸ்ரீ அழகு நாச்சியம்மன் அருள்மிகு ஸ்ரீ வன்னிருடைய அய்யனார்திருக்கோவில் கும்பாபிஷேகம் 2000க்கும் மேற்பட்டபக்தர்கள் சூழ மகா அஷ்டபந்தன கும்பாபிஷேகம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. தொடர்ந்து கும்பாபிஷேக விழாவில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.கும்பாபிஷேக நிகழ்ச்சி ஏற்பாடுகளை விழா கமிட்டியினர் சிறப்பாக செய்து இருந்தனர்.**

## காலி மனை இடம் பன்மடங்கு உயர்வால் விவசாயத்தை அழித்து மனை இடத்திற்கு மாறும் மக்கள்

*வருஷநாடு, செப்டம்பர் 10 2021:* கடமலை மயிலை ஒன்றியத்தில் காலியிடம் விலை பன்மடங்கு உயர்ந்துள்ளதால் விவசாயத்தை விட்டு புதிய பிளாட்டுகள் உருவாகி வருகின்றன மக்கள் தொகை அதிகமானதாலும் கிராமங்களில் இருந்து அருகில் உள்ள பெரும் ஊராட்சிக்கு மக்கள் குடியேறுவது இந்த விலை உயர்வுக்கான காரணம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி சமூக ஆர்வலர்களிடம் கேட்டபோது தற்போது வனத்துறையினர் ஒரு சில குறிப்பிட்ட கிராமங்களில் உள்ள மக்களை வெளியேற சொல்வதாலும் மலை கிராமங்களில் பேருந்து மருத்துவமனை குறிப்பாக சிக்னல் டவர் கல்வி வசதி போன்ற அடிப்படை வசதிகளை தேர்வு செய்தும் விவசாயத்திற்கு போதுமான வருவாய் இல்லாததால் இழப்பு ஏற்படுவதாலும்

தொழில் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்ற நோக்கில் படையெடுத்து வருவதால் போட்டி போட்டுக்கொண்டு இடங்களை விலக்கி கேட்பதால் இந்த விலை உயர்வுக்கு காரணம் என்கின்றனர் எதிர்வரும் 10 வருடங்களில் இப்பகுதியில் 80% விவசாயம் பாதிக்கப்படும் என்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர் விவசாய நிலங்கள் யாவும் மரங்களுக்கு பதிலாக கட்டிடங்களை முளைத்திருக்கும் என்று வேதனையுடன் கூறுகின்றனர்.

## ஒன்றிய பகுதியில் உள்ள கிராமங்கள் மற்றும் மலை கிராமங்களில் பெரும்பாலான மரங்களை வெட்டி விறகுக்கு விற்கும் விவசாயிகள்

*வருஷநாடு, செப்டம்பர் 10 2021:* ஒன்றிய பகுதியில் உள்ள கிராமங்கள் மற்றும் மலை கிராமங்களில் பெரும்பாலான விவசாயிகள் அதிகமாக கொட்டை முந்திரி இலவ மரம் மாமரம் ஆகிய வருட வருமான மரங்களை வைத்து மகசூல் எடுத்து வந்தனர். இந்த மரங்களுக்கு அதிக தண்ணீர் தேவையில்லை என்ற காரணத்தினால் பண்ருட்டி சேலம் நகருக்கு இணையாக மனம் சார்ந்த நிலத்தில் இதனால் நடப்பட்டது. இடையில் போதுமான மழை இல்லாததாலும் இடுபொருள் முதல் மருந்து மற்றும் கூலி உயர்வால் பாதிக்கப்பட்டனர் வேலையாட்கள் நூறு நாள் வேலைத் திட்டத்திற்கு செல்வதால் விவசாய பணிக்கு ஆட்கள் கிடைப்பதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. வருட மகசூல் என்பதால் மரம் பராமரிப்புக்கு தேவையான செலவுகள் செய்ய வெளியில் கடன் வாங்கியும் விவசாயம் செய்கின்றனர் ஆனால் போதுமான வருவாய் இல்லாததாலும் அரசு வழங்கும் பயிர் கடன் மற்றும் விவசாய கடன் சொட்டுநீர் பாசனம் மானியம் என இந்த மரங்களுக்கு அரசு மானியம் வழங்கவில்லை. எனவும் அவ்வாறு வழங்கினால் ஏக்கர் ஒன்றுக்கு 20 ஆயிரம் அதிகபட்சமாக இருப்பதால் இந்த மரங்களை வெட்டி விறகு விற்பனை செய்து வருகின்றனர். இதனால் இப்பகுதியில் விவசாய நிலங்கள் நாளுக்கு நாள் அழிந்து வருகிறது. என்பது வேதனைக்குறிய செய்தியாக இருக்கின்றது என சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

## ஒலக்கூர் அருகே டயர் வெடித்ததால் லாரி நெடுஞ்சாலையில் கவிழ்ந்தது அரசு மருத்துவக் கல்லூரிக்கு ஏற்றிச் சென்ற கண்ணாடி ஜன்னல்கள் சிதறின



*திண்டிவனம், செப்.10 2021 :* திண்டிவனம் அருகே டயர் பஞ்சர் ஆனதால் தேசிய நெடுஞ்சாலையில் கவிழ்ந்த லாரியில் அரசு மருத்துவக் கல்லூரிக்கு ஏற்றிச் சென்ற ஜன்னல் கண்ணாடி பறந்து சென்று சாலையில் நடந்து சென்றவர் மீது விழுந்ததில் முதியவர் படுகாயமடைந்தார்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த கீழ்ஆதனூர் பகுதியை சேர்ந்தவர் முத்துகிருஷ்ணன். இவர் இன்று காலை தனது வீட்டிலிருந்து ஒலக்கூர் கூட்டு சாலை அருகே, சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்பொழுது சென்னை திருமுல்லைவாயல் சிப்காட் பகுதியில் இருந்து கள்ளக்குறிச்சி மாவட்டம், அரசு மருத்துவக் கல்லூரி கட்டிட பணிக்காக கண்ணாடி ஜன்னல்களை ஏற்றிக்கொண்டு லாரி சென்று கொண்டிருந்தது. லாரியை சென்னை, கோடம்பாக்கம் எம். ஆர். கே. நகர் பகுதியை சேர்ந்த மைக்கேல் ராஜ் என்பவரது மகன் வின்சென்ட் (37) ஓட்டி வந்தார். லாரி இன்று காலை 7.30 மணி அளவில் ஒலக்கூர் கூட்டு சாலை அருகே வந்து கொண்டிருந்தபோது லாரியின் இடது பக்க முன் டயர் திடீரென்று வெடித்ததில் நிலைதடுமாறிய லாரி நெடுஞ்சாலையில் கவிழ்ந்தது. லாரியில் ஏற்றிச் சென்ற கண்ணாடி ஜன்னல்கள் சாலையில் சிதறின. அதில் ஒரு கண்ணாடி பறந்து சென்று சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த முத்துகிருஷ்ணனின் காலில் விழுந்தது. இதில் அவரது காலில் பலத்த காயம் அடைந்தார். உடனே அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு ஒலக்கூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இந்த விபத்தால் சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 30 நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த ஒலக்கூர் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து போக்குவரத்தை சரி செய்தனர். மேலும் மாற்று வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டு சாலையில் சிதறிக் கிடந்த கண்ணாடி ஜன்னல்களை ஏற்றி கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்தனர்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

## கட்டுமானப் பொருட்கள் விலை உயர்வால் புதிய கட்டிடம் கட்டுவோர் தயக்கம்

*வருஷநாடு, செப்டம்பர் 10 2021:* கடமலை மயிலை ஒன்றியத்தில் கட்டிடம் கட்ட தயக்கம் காட்டி வருகின்றனர். மேலும் தேவைக்கு கண்டிப்பாக கட்டியாக வேண்டும் என்ற சூழ்நிலையில் வெளியில் கடன் வாங்கி கடன் பட்டு கட்டிடம் கட்டி வருகின்றனர். கட்டுமானப் பொருட்களான மணல் ஜல்லி சிமென்ட் கம்பி செங்கல் எம்சாண்ட் கருங்கல் விலையும் மூன்று மடங்கு வரையும் வண்டி வாடகை இருமடங்குகளாகவும் கொத்தனார் சித்தாள் கூலி பெயிண்டர் எலக்ட்ரீசியன் கூலி உயர்ந்துள்ளதால் வானம் தோண்டி கட்டிடம் கட்டும் முடிக்கும் வரை மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். இதற்கு முன் சதுரம் ஒன்றுக்கு 70 ஆயிரத்துக்கு இருந்த செலவுகள் 2021 நடப்பு படி சதுரம் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் வரை உயர்ந்துள்ளதால் ஆரம்பித்த வேலையை இடையில் நிறுத்த முடியாமல் வெளியே நபரிடம் கடன் வாங்கி வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் கடன் உதவி பெற அரசு மற்றும் தனியார் வங்கியை நாடி புரோக்கர் கமிஷன் வங்கி கடன் வங்கியின் வட்டி கட்ட முடியாமல் மொத்த சொத்தையும் எழுதி வைத்துவிட்டு நடுத்தெருவில் நிற்கும் நிலையும் உள்ளது இது தொடர்பாக தன்னார்வலர்கள் கூறுகையில் கட்டிடம் கட்டுவோர் அவர்களது பட்ஜெட்டில் அடங்குமா என யோசித்து கட்டிடம் கட்ட செயல்பட்டால் இருக்கின்ற சொத்துக்களை விற்க நேரிடாது எனக் கூறுகின்றனர். எனவே அரசு கட்டுமானப் பொருட்கள் இரும்பு மற்றும் சிமெண்ட் மற்ற உற்பத்திப் பொருட்களுக்கு ஜிஎஸ்டி வரியை வரியுடன் அதிகபட்ச அதிகமாக வருவதால் கட்டுமான பொருட்களுக்கு வரி விதிவிலக்கு செய்யவேண்டுமென கேட்டுக் கொள்கின்றனர்.

## உலகளாவிய டிஜிட்டல் ஷாப்பிங் தளத்தை அறிமுகப்படுத்தும் அடிடாஸ் இந்தியா டிஜிட்டல் நிறுவனம்

*சென்னை, செப்டம்பர் 10 2021:* முன்னணி விளையாட்டு ஆடை நிறுவனமான அடிடாஸ் தனது முதல் டிஜிட்டல் வாடிக்கையாளர் சேவையை இன்று நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது. நுகர்வோரிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள் மற்றும் விமர்சனங்களை மனதில் வைத்து அதன் புதிய வலைத்தளம் (www.adidas.co.in) கருத்துருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த டிஜிட்டல் சேவையின் மூலம் தடையற்ற அனுபவம், புதுமை, அதிநவீன பயனர் அனுபவம் போன்ற விஷயங்களில் அடிடாஸ் நிறுவனம் கவனம் செலுத்தும்.




நுகர்வோர் டிஜிட்டல் ஸ்டோர் முழுவதும் சிரமமின்றி செல்லவும், தங்களுக்குப் பிடித்த பொருட்களை எளிதாக வாங்கவும் இந்த வலைத்தளம் ஒரு புதுமையான தொழில்நுட்பம் சார்ந்த அனுபவத்தை வழங்குகிறது. இந்த டிஜிட்டல் சேவையின் மூலம், நுகர்வோர் சரியான தயாரிப்புகளை அதன் மேம்பாடுகளை கண்டறிந்து சிரமமின்றி வாங்குவதன் மூலம் அவர்களின் ஒட்டுமொத்த ஆன்லைன் ஷாப்பிங் அனுபவத்தை மேம்படுத்துகிறது.

வாழ்க்கை முறை, பயிற்சி மற்றும் விளையாட்டு போன்ற எல்லா வகையான தேவைகளுக்கும் பொருந்தக்கூடிய ஒரே இடமாக இந்த டிஜிட்டல் ஷாப்பிங்கை அடிடாஸ் நிறுவனம் வடிவமைத்துள்ளது. மேலும் இது பெண்கள் மற்றும் குழந்தைகளின் முக்கிய நுகர்வோர் தொகுப்புகளுக்கான அனுபவத்தையும் சிறப்பாக வழங்குகிறது.

இந்த டிஜிட்டல் ஷாப்பிங் அறிமுகம் குறித்து பேசிய அடிடாஸ் நிறுவனத்தின் மூத்த இயக்குனர் திரு. சுனில் குப்தா கூறுகையில், எங்கள் புதிய டிஜிட்டல் ஸ்டோர் தொடங்கப்பட்டதன் மூலம், நுகர்வோர் கருத்துக்களை அங்கீகரிப்பதன் மூலம் இந்தியாவில் எங்கள் நிறுவனத்தின் நம்பகத்தன்மையை வலுப்படுத்த விரும்புகிறோம். எங்கள் நோக்கம் ஒரு இணையவழி தளத்திலிருந்து ஒரு டிஜிட்டல் பிராண்ட் ஸ்டோருக்கு நுகர்வோர்களை வழிநடத்துவதாகும். இந்த டிஜிட்டல் ஸ்டோர் எங்கள் நம்பகத்தன்மையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, நுகர்வோர் அனுபவத்தை மேம்படுத்துகிறது மற்றும் எங்கள் நிலைத்தன்மையின் முயற்சிகளை விவரிக்கிறது. புதுமையான தொழில்நுட்பம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பயனர் சேவைகள் நுகர்வோருக்கு மறக்க முடியாத அனுபவத்தை அளிக்கும் என்று கூறினார்.

இந்த துவக்க நிகழ்ச்சியின் போது அடிடாஸ் நிறுவனம், இந்த வலைத்தளத்தின் பீட்டா பதிப்பில் ஏதேனும் பிழைகள், சிக்கல்கள் கண்டறியும் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் ஹேக்கர்களுக்கு வெகுமதி வழங்குவதாக அறிவித்தது. நுகர்வோரின் ஷாப்பிங் ஆற்றலைத் தக்கவைத்து, வரவிருக்கும் பண்டிகை காலத்திற்கு அவர்களைத் தயார்படுத்த புதிய மற்றும் அற்புதமான வெளியீடுகள் போன்ற புதுமையான சலுகைகள் மற்றும் செயல்பாடுகள் மூலம் இந்த பிராண்ட் நுகர்வோருடன் தொடர்ந்து ஈடுபடவுள்ளது.

# வேப்பூர் அருகே ரேஷன் அரிசி கடத்திய இருவர் கைது





வேப்பூர் செப் -10: வேப்பூர் அடுத்த காஞ்சிராங்குளம் பஸ் நிறுத்தம் அருகே நேற்று முன்தினம் இரவு 9மணியளவில் கடலூர் மாவட்ட குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு பிரிவு சப்-இன்ஸ்பெக்டர் கவியரசன் தலைமையில் போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அவ்வழியாக வந்த மினிலாரியை சோதனை செய்ததில் ரேஷன் அரிசி 50 கிலோ எடை கொண்ட மூட்டையாக 1500கிலோ ரேஷன் அரிசி கடத்தி வரப்பட்டது தெரியவந்தது.

இதுகுறித்து அந்த வாகனத்தில் இருந்தவர்களிடம் குடிமைப்பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு பிரிவு போலீசார் விசாரணை செய்ததில் வேப்பூர் வட்டம் மங்களூர் மாரியம்மன் கோயில் தெருவை சேர்ந்த சேவான் மகன் சித்திரவேல் (வயது 59) திட்டக்குடி வட்டம் ஆவட்டி அடுத்த ஆதனூர் பகுதியை சேர்ந்த வெங்கடேசன் மகன் விக்னேஷ் (வயது 24 ) ஆகிய இருவரும் வேப்பூர், ,திட்டக்குடி , ஆவட்டி, மங்களூர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களிடம் ரேஷன் அரிசியை குறைந்த விலைக்கு வாங்கி அதை கோழித் தீவனத்திற்காக சேலம் மாவட்டம் தலைவாசலுக்கு கடத்தி செல்ல முயன்றது தெரியவந்தது.

இதையடுத்து குடிமைப்பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு பிரிவு போலீசார் சித்திரவேல், விக்னேஷ் ஆகிய இருவர் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்தனர் மேலும் கடத்தி வரப்பட்ட ரேஷன் அரிசி மற்றும் மினிலாரியையும் பறிமுதல் செய்தனர்.



**மதுரை: மதுரை மாவட்டம் பேரையூர் பேரூராட்சியில் ஆய்வு பணி மேற்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர் வளை மீட்பு பூங்காவினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் பேரையூர் பேரூராட்சி செயல் அலுவலர் வைரக்கண்ணு மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.**





**மதுரை: மதுரை மாவட்டம் பேரையூர் பேரூராட்சியில் ஆய்வு பணி மேற்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர் வளை மீட்பு பூங்காவினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் பேரையூர் பேரூராட்சி செயல் அலுவலர் வைரக்கண்ணு மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.**

# கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனாரின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது சிலைக்கு கீதா செல்வ மாரியப்பன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்



**தூத்துக்குடி, செப்டம்பர் 10 2021: இந்திய சுதந்திரப்போராட்டத்தின்போது வெள்ளையர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்து கப்பலோட்டிய தமிழர் வ உ சிதம்பரனார் 150-வது பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடி பழைய மாநகராட்சியில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அகில இந்திய வ.உ.சி பேரவை தலைவர் நெல்லையப்பன். தூத்துக்குடி கீதா செல்வ மாரியப்பன். ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இந்நிகழ்ச்சியில் தொழிலதிபரை டி.ஏ.தெய்வநாயகம். வழக்கறிஞர் புதுக்கோட்டை சரவணன். சட்ட ஆலோசகர் மந்திரமூர்த்தி வழக்கறிஞர்கள் சீனிவாசன். செல்வம், மகாராஜன், தனசேகர் ஹரிகிருஷ்ணன் உட்பட ஏராளமானவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.**

# வேப்பூர் போலீசார் சார்பில் விநாயகர் சதுர்த்தி விழா தடை குறித்து ஆட்டோ மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம்



வேப்பூர் செப் -10 2021: வேப்பூர் பகுதிகளில் வினாயகர் சதுர்த்தி விழா கொண்டாட தமிழக அரசு தடை விதித்தது குறித்து வேப்பூர் போலிசார் அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டனர்.

கொரோனா தொற்று பரவலை தடுக்கும் நடவடிக்கையாக, தமிழகம் முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழாவில், பொது இடங்களில் சிலை வைக்கவும், ஊர்வலமாக செல்லவும் அரசு தடை விதித்துள்ளது.

அதனை தொடர்ந்து, கடலூர் மாவட்டம், வேப்பூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ரமேஷ்பாபு தலைமையிலான போலீசார், வேப்பூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில், ஆட்டோ மூலம் விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு அரசு தடை விதித்தது குறித்தும், கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அப்போது, சப் இன்ஸ்பெக்டர் சந்திரா, தனிப்பிரிவு தலைமை காவலர் இளையபெருமாள் உட்பட பலர் பங்கேற்றனர்.



**மதுரை மாவட்டம் டிகல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றுவரும் கொல்ல வீரன் பட்டி நல்லியதேவன்பட்டி இடையிலான தார் சாலை பணி குன்னத்தூர் கிராமத்தில் நடைபெற்று வரும் மண்புழு உரம் தயாரிக்கும் பணி டி.கல்லுப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்று வரும் கொரோனா தடுப்பூசி பணி உள்ளிட்டவளர்ச்சித் திட்டப் பணிகளை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ் சேகர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் கல்லுப்பட்டி ஆணையாளர் ஆசிக் உதவி செயற்பொறியாளர் கண்ணன் உட்பட அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.**

# குமணன் தொழுவில் மருத்துவ முகாம்



வருஷநாடு, செப்டம்பர் 10 2021: கடமலை மயிலை ஒன்றியம் குமணன் தொழு ஊராட்சியில் மருத்துவ முகாம் நடைபெற்றது இம்முகாமில் வட்டார மருத்துவர் ஜீவகன் சுகாதார ஆய்வாளர் முருகானந்தம் சுகாதார செவிலியர்கள் ராதிகா ரேவதி முத்துலட்சுமி ஆகியோர் ஈடுபட்டனர் பொதுமக்கள் ஆர்வத்துடன் தடுப்பூசி போட்டுக் கொண்டனர்.

# திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவில் மரங்கள் திருட்டு தனமாக வெட்டி விற்பனை





திருவட்டார், செப்டம்பர் 10 2021: கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவில் கிழக்கு தென்கோடி மூலையில் அமைந்திருக்கும் நரசிம்ம மடம் (நடுவில் மடம்)-க்கு சொந்தமானது, இந்து சமய அறநிலையத்துறை, வடிவீஸ்வரம் உதவி ஆணையர் கண்காணிப்பில் உள்ளது.

மடத்தின் சொத்திலிருந்து பலதரப்பட்ட விலை உயர்ந்த மரங்களை மடத்தின் சொத்தை பராமரிக்கும் பொறுப்பில் உள்ள சுகுமாரன் நாயரின் மகன் ஜோதி என்பவர் வெட்டி விற்றுள்ளார்.

அறநிலைத்துறை மரங்களை வெட்டி விற்க இவருக்கு யார் அதிகாரம் கொடுத்தது. கோயிலையும், கோயில் சொத்தையும் பாதுகாக்க வேண்டியவரின் மகன் கோயில் மரங்களை திருட்டு தனமாக வெட்டி விற்றுள்ளார்.

இது பக்தர்களுக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அறநிலையத்துறை இவர் மீது தக்க நடவடிக்கை எடுத்து மேற்படி மடத்து சொத்தை பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருவட்டார் மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.





நாகர்கோவில், செப்டம்பர் 10 2021: நாகர்கோவில் வேப்பமூடு ஜங்ஷன் செல்வம் டீ ஸ்டால் அருகில் நடந்த சம்பவம் கடை உரிமையாளரை தாக்கிய இளம்பெண் முதியோரை கொலைவெறியுடன் இளம்பெண் தாக்கியது பொதுமக்கள் அந்த இளம்பெண்ணை தடுத்தும் நிற்காமல் பொதுமக்களை அவதூறாகப் பேசியும் கடை உரிமையாளரை கொலைவெறியுடன் தாக்கிய பெண்ணை காவல்துறை உடனடியாக கைது செய்ய வேண்டும் இதுபோல் கொலைவெறி சம்பவங்கள் நாகர்கோவில் பகுதியில் மீண்டும் நடைபெறாமல் இருப்பதற்கு காவல்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

# 75 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை நினைவு கூறும் வகையில் 7500 பனை விதைகள் நடவு



விழுப்புரம், செப். 10 2021: விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தாலுக்கா தொரப்பாடி பஞ்சாயத்துக்குட்பட்ட மேல்புதுப்பபட்டு பெரிய ஏரிகரையில் சேகரிப்பட்ட பனண விதைகளை நடும் பணி நடைபெற்றுது.

தமிழகத்தின் மரம் என சிறப்பு பெற்ற பனை மரத்திற்கும் தமிழர்களுக்கும் பன்டைய காலங்களிலிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பனை மரத்தினை பாதுகாக்க தமிழக அரசு வேளான் சட்ட மசோதாவில் பனை மரங்களை வெட்ட மாவட்ட ஆட்சியர் ஆணை வேண்டும் எனவும் பனை தொழிலை ஊக்குவிக்கவும் பட்ஜெட்டில் 3 கோடி நிதி ஒதுக்கியதின் மூலம் பனை தொழிலை நம்பியுள்ள பல ஆயிரம் குடும்பத்தினர் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

மேலும் பனை மரத்தின் அனைத்து பாகங்களும் மனிதர்களுக்கு முக்கிய பயன் தருகிறது. இதனால் சமூக ஆர்வலர்கள் பனை மரங்களை காக்கவும் புதிய பனை மரங்களை நடவும் ஆர்வம் காட்டி வரும் நிலையில் மேல்புதுப்பட்டு கிராமத்தில் உள்ள பெரிய ஏரியில் மேல்மலையனூர் வட்டாச்சியர் நெகரினசா தலைமையில் தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்கம் சார்பிலும், 75 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை நினைவு கூறும் வகையில் பனை விதைகளை சேகரித்து அவற்றை நடும் பணியினை மேல்மலையனூர் கிராம அலுவலர் காளிதாஸ் மற்றும் சமூக ஆர்வலர்கள் மேற்கொண்டனர்.

இத்தகைய செயல்பாட்டினை பல்வேறு தரப்பினரும் பராட்டி வருகின்றனர்.

# நிதி ஆண்டு 2022-ல் ரூ.1000 கோடி மனைகள் விற்பனை செய்ய ஜி ஸ்கொயர் நிறுவனம் இலக்கு




சென்னை, செப். 10 2021: தென்னிந்தியாவின் மிகப்பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனமான ஜி ஸ்கொயர் நிறுவனம் பல்வேறு வீட்டு மனை திட்டங்களை சென்னை மற்றும் கோவையில் அறிமுகம் செய்து வெற்றிகரமாக அவற்றை விற்பனை செய்து வருகிறது. இந்த நிலையில் தற்போது இந்நிறுவனத்தின் 'ஜி ஸ்கொயர் பீச்வாக்' வீட்டு மனைகள் திட்டம் சென்னை நகர எல்லைக்குள் நீலாங்கரையில் ஈசிஆர் சாலைக்கு மிக அருகில் துவக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பல்வேறு வீட்டு மனை திட்டங்களை இந்நிறுவனம் அறிமுகம் செய்து வருவதன்மூலம் 2022-ம் நிதி ஆண்டின் இறுதிக்குள் சென்னை மற்றும் கோவையில் 15க்கும் மேற்பட்ட திட்டங்களை அறிமுகம் செய்து 1000 கோடிக்கு வர்த்தகம் செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.

இது குறித்து ஜி ஸ்கொயர் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி என். ஈஸ்வர் கூறுகையில், இந்த நிதியாண்டில் எங்களின் 7வது திட்டமான 'ஜி ஸ்கொயர் பீச்வாக்' வீட்டு மனை திட்டத்தை அறிமுகம் செய்வதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரு இடங்களிலும் எங்களின் திட்டங்களுக்கு கிடைத்த வரவேற்பால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளோம். இதற்கு முன் அறிமுகம் செய்யப்பட்ட எங்களின் அனைத்து திட்டங்களும் நல்ல வரவேற்பை பெற்றதோடு 20 நாட்களில் அனைத்து மனைகளும் விற்பனையாகியது. சிறந்த விலையில் பிரதான சாலைகளுக்கு மிக அருகில் உயர்தரமிக்க மனைகளை மட்டுமே விற்பனை செய்வதில் எங்கள் நிறுவனம் நிபுணத்துவம் பெற்றது. இது எங்களின் தனித்துவமிக்க செயல்பாடாகும். தமிழ்நாட்டில் முதல் மற்றும் இரண்டாவது பெரிய நகரங்களில் 'பர்பெக்ட் பிளாட்' கலாச்சாரத்தை கொண்டு வந்ததில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம் என்று தெரிவித்தார்.



நாகர்கோவில்: நாகர்கோவில் மாநகராட்சியின் வினோத பணிகளால் மக்கள் பெருமிதம். மாநகராட்சியின் கடமை உணர்ச்சி மெய்சிலிர்க்க வைக்கிறது. சாலைகளில் வாகனம் ஓட்டுவதற்கு வாகன ஓட்டிகளுக்கு பெரியவங்க நெருக்கமாக இருந்த சாலையை ஒரு வழிப் பாதையாக மாற்றி வானங்கள் அமைதியாக செல்வதற்கு வழிவகுத்து தந்ததற்கு மாநகராட்சி ஆணையர் மற்றும் ஊழியர்களுக்கு நாகர்கோவில் மாநகராட்சி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# திருப்பரங்குன்றம் அருகே கி.பி 16-ம் நூற்றாண்டை சேர்ந்த கிரந்தம் எழுத்துகளுடன் கல்வெட்டு மற்றும் சிற்பம் கண்டுபிடிப்பு



மதுரை, செப்டம்பர் 10 2021: மதுரை மாவட்டம் கருவேலம்பட்டி அருகே சுமார் 500 ஆண்டு பழமையான கிரந்த எழுத்துகளுடன் கூடிய கல்வெட்டு மற்றும் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மதுரை திருப்பரங்குன்றம் ஒன்றியம் கருவேலம்பட்டி பகுதியில் சூரிய பிரகாஷ் கொடுத்த தகவலின்படி மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரி முதுகலை வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியரும் பாண்டியநாடு பண்பாட்டு மையத்தின் தொல்லியல் கள ஆய்வாளர் முனைவர் து.முனீஸ்வரன் தலைமையில் பேராசிரியர்கள் லெட்சுமண மூர்த்தி, அஸ்வத்தாமன், சுப்பிரமணியன், ராமகிருஷ்ணன் ஆகியோர் கொண்ட குழு மேற்பரப்பு கள ஆய்வு செய்த போது தனியார் விவசாய நிலத்தில் தனி பாறையில் கிரந்தம் கல்வெட்டும் புடைப்பு சிற்பமும் கண்டறியப்பட்டது.இக்கல்வெட்டை படியெடுத்து ஆய்வு செய்தபோது கி.பி. 16ம் நூற்றாண்டை சேர்ந்தவையாகும்.

இது குறித்து உதவிப் பேராசிரியர் முனைவர் து முனீஸ்வரன் கூறியாதவது ; கருவேலம்பட்டி இருந்து மொச்சிக்குளம் செல்லும் சாலை அருகே தனியார் விவசாய நிலத்தில் தனி பாறையில் 2 அடி அகலம், 4 அடி நீளம் கொண்ட 4 வரிகளில் கிரந்தம் எழுத்துகளுடன் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டை படியெடுத்து ஆய்வு செய்த போது கோபாலகிருஷ்ணன் மகன் என்ற வரியில் தொடங்கி நான்காவது வரியில் தம்மம் என்ற சொல்லில் முடிவு பெறுகிறது. தம்மம் என்ற சொல் இருப்பாதல் தானம் வழக்கப்பட்டதை அறிய முடிகிறது .இடையில் வெட்டப்பட்ட கல்வெட்டு காலப்போக்கில் மழை, வெயில் போன்றவாற்றால் தேய்மான ஏற்பட்டு சிதைந்து விட்டதால் தொடச்சியான பொருளை அறிய முடியவில்லை.

இக்கல்வெட்டின் இடது புறம் இருக்கின்ற பாறையில் 2 அடி அகலம், 3 அடி நீளம் கொண்ட புடைப்பு சிற்பமாக சொதுக்கப்பட்டுள்ளது.இச்சிற்பம் நீண்ட காதுகளுடன், கழுத்தில் அணிகலன் அணிந்து கொண்டு ஆணின் சிற்பமும், சரிந்த கொண்டையுடன், நீண்ட காதும் கையில் வளையல் அணிந்து கொண்டு சற்று சாய்ந்த நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.இச்சிற்பம் அப்பகுதியில் வாழ்ந்த தலைவன் தலைவிக்காக உருவாக்கப்பட்டு இருக்கலாம். இச்சிற்பம் அதிகமான தேய்மானம் ஏற்பட்டதால் முகம் தெளிவற்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு மற்றும் சிற்பத்தினை தமிழக தொல்லியல் துறையில் இருந்து ஓய்வு பெற்ற இனை இயக்குனர் முனைவர் சொ.சாந்தலிங்கம் ஐயா அவர்களுடன் உதவியுடன் ஆய்வு செய்த போது கி.பி.பதினாறாம் நூற்றாண்டை சேர்ந்தவை என அறியப்பட்டது. தற்போது மக்கள் நீலன், நீலி என்று பெயரில் தெய்வமாக வழிப்பட்டு வருகின்றனர் என்றார்.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# HELLO Mirror MADRAS

hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Friday, September 10, 2021 | Rs.2/- | ISSUE - 58

## PM praises the indomitable spirit and will power of the entire Contingent

New Delhi, September 10 2021: Prime Minister Narendra Modi hosted the Indian Contingent of Tokyo 2020 Paralympic Games at his residence earlier today. The Contingent included para-athletes as well as coaches.

Prime Minister had a candid and informal interaction with the entire contingent. He congratulated them for their record breaking historic performance at the Games. He said that their achievement will significantly boost the morale of the entire sporting community in the country, and budding sports persons will feel encouraged to come forward to take up sports. He added that their performance has led to awareness about sports increasing leaps and bounds.

Prime Minister especially praised the indomitable spirit and will power of the Contingent and said that the performance is praiseworthy in light of the insurmountable odds that the para-athletes have overcome in their lives. Boosting the morale of those who couldn't achieve a podium finish, the Prime Minister said that a true sportsperson does-not get bogged down by defeat or victory, and keeps on moving forward. He said that they are ambassadors of the country, and they have increased the prestige of the nation on the world stage through their remarkable performance.

Prime Minister said that through their 'tapasya, purushartha and parakram', the para-athletes have changed the way people look at them. He said that in this period of celebration of Azadi ka Amrit Mahotsav, they should identify a few areas outside of the world of sports and explore how



they can motivate people and help bring change.

The para-athletes thanked the Prime Minister for giving them the invitation and said that sitting with him at the same table is a big achievement in itself. They especially thanked him for constant guidance, motivation and support throughout their endeavour, and said that the athletes of other countries were amazed when they came to know that their Indian compatriots received congratulatory phone calls from their Prime Minister.

They highlighted how the government left no stone unturned in making the best possible arrangement for their training.


Several players gifted their signed sporting equipment, with which they won their medals, to the Prime Minister. A stole, signed by all medalists, was also gifted to the Prime Minister. He said that the sporting equipment would be auctioned and was welcomed by the athletes. Union Sports Minister and Union Law Minister were also present on the occasion.

## Scientists peek into the Sun by estimating magnetic fields using radio observations

New Delhi, September 10 2021: Indian Scientists, along with international collaborators, have measured the magnetic field of an eruption from the Sun's atmosphere (by observing the weak thermal radio emission associated with the erupted plasma for the first time), offering a rare peek to the interior of the Sun. The study of the phenomenon happening in the Sun's atmosphere or the solar corona provides insights into the inner workings of the Sun.

The Sun is an extremely active object, spewing out vast quantities of gas in many violent events and the corona is a region of very high temperatures, strong magnetic fields, and violent plasma eruptions. A class of such eruptions are Coronal Mass Ejections (CMEs). CMEs are the most powerful explosions happening in our solar system. When a really strong CME blows past the Earth, it can damage the electronics in our satellites and disrupt radio communication networks on Earth. Hence, astronomers regularly study these events. This field of research helps to understand Space Weather.

"Knowing the source region of the CMEs, the associated magnetic field, and their kinematics in the region up to seven lakh kilometer either above the solar surface or off its limb, are important to fully understand the characteristics of the CMEs in



a holistic manner," says C. Kathiravan, another co-author of the study.

## Fisdom forays into tech-led HNI Wealth space; appoints Abhijit Bhave as the CEO of Fisdom Private Wealth

Chennai, September 10 2021: Fisdom, Indias leading wealth-tech company, has announced the launch of its new venture Fisdom Private Wealth. The company has entered the technology led wealth management space to cater to the investment needs of HNIs. It has roped in wealth management industry veteran, Abhijit Bhave as the Chief Executive Officer to head Fisdom Private Wealth.

Fisdom Private Wealth will be offering differentiated investment products to its clients - Mutual Funds, PMS, AIFs, Unlisted private equity, Bonds, FDs, Structured products, Insurance as well as international products. This new arm of Fisdom under the aegis of Abhijit Bhave, also plans to launch various other proprietary products in the due course. Fisdom Private Wealth aims to bridge the gap of underserved HNI markets in the country with a robust tech-platform augmented with dedicated support by experienced wealth managers.

Over two and a half decades across the financial services industry in India, UAE and Vietnam, Abhijit has held leadership roles in large global organizations like Deutsche Bank & HSBC. He has also had stints with Karvy Private Wealth, ICICI Bank and Unit Trust of India in various roles and functions across diverse verticals such as asset management, cash management, corporate and retail banking.

Fisdom has pioneered a unique bank partnership led wealth management model that provides access to high quality services to customers in tier 2 and tier 3 locations. In the near future Fisdom Private Wealth will also look to extend its services to the HNI customers of Fisdoms partner banks as well.

Fisdom Private Wealth has started-off its business with 50 people at 10 locations in India including Mumbai, Delhi NCR, Lucknow, ChandSpangarh Kolkata, Bangalore, Surat, Pune, Baroda and Bhopal, with an objective of widening its reach to serve HNIs across the country and even overseas. This new venture plans to further provide a new dimension to wealth management offerings through technology and empower HNIs to take superior decisions in their investment journey.



**Fisdom Private Wealth also has a dedicated application (App) that provides fast and secure transactions with a user-friendly interface. Apart from the app, clients also have the choice to have in-person consultations thereby offering a mix of digital and physical solutions and making it a Phygital wealth management business proposition for HNIs.**

**Subramanya SV, Co-Founder and CEO, Fisdom said, We are delighted to venture into private wealth segment and welcome Abhijit to lead this business with his proven expertise and experience. With Fisdom Private Wealth, which is one of our major strategic initiatives, we aim to transform the way HNIs experience their wealth management journey. Through our robust and secure technology infrastructure, we endeavour to provide best-in-class wealth management solutions backed by comprehensive research and capabilities. With Abhijits experience in multiple facets of the financial services sector in different geographies, we are confident that he will help this create an impactful business, assisting our HNI clients in achieving their**

## G SQUARE TARGETS INR 1000-CR SALES IN FY22

Chennai, September 10 2021: G SQUARE, South India's largest and highly experienced land aggregator and plot promoters, today announced the launch of G SQUARE Beachwalk, ECR's only ON-ROAD plotted development project within city limits at Neelankarai. The company has set an ambitious sales target of INR 1000-cr in by the end of FY22 and plans to launch 15+ projects across Chennai and Coimbatore by the end of the fiscal.

Commenting on the launch, Eshwar Nagarajan, Chief Executive Officer, G SQUARE Realtors Private Limited said, "We are happy to be pre-launching G SQUARE Beachwalk, our 7th plotted development offering this fiscal. We are extremely overwhelmed with the response that we have got for our projects till date in both Chennai and Coimbatore. All our projects launched earlier have received phenomenal response and have been sold-out almost within 20 days. G SQUARE believes and specialises in offering only premium plots in prime 'on road' locations at the best




prices, which by itself is a unique proposition. We are proud to have brought the 'perfect plot' culture to the first and the second largest cities in Tamil Nadu."

## General Manager inspects Perambur Loco Works Airless Centrifugal Shot Blasting machine and host of other facilities were inaugurated

Perambur, September 10 2021: John Thomas, General Manager, Southern Railway inspected Loco Works, This is part of an annual exercise to assess the maintenance of the railway assets that contribute to safe operation of trains. S.Srinivas, Principal Chief Mechanical Engineer and other Principal Heads of Departments of Southern Railway and Arun Devaraj, Chief Workshop Manager, Loco Works along with team of officials accompanied the General Manager.

In the morning, General Manager inspected the recently opened Canteen facility at Loco Works. The canteen, functioning since 15th of May 2021 serves about 250 to 275 diets per day for COVID-19 patients of Railway Hospital, Perambur apart from catering to the needs of employees of the workshop. During the peak of second wave, the canteen was functioning full-fledged, offering food and snacks for COVID patients and employees. General Manager appreciated the canteen staff for their commendable services during the times of crisis.

Later, General Manager inaugurated Airless Centrifugal Shot Blasting machine which ensures removal of dust from Hellical coil springs of LHB and ICF type coaches, thus ensuring good suspension for smooth train journeys. The machine will also increase out turn efficiency by 100% optimizing time and power consumption besides checking air pollution and moisture content when compared to the conventional method of shot blasting.

John Thomas also inaugurated Fourier Transform Infrared Spectrometer in CMT Lab at Loco works. The equipment is used for quantitatively detecting the composition of polymer (Rubber & Plastics) components of Rolling stock so as to determine the quality and life of the component to plan replacement.

Apart from the above, during the course of his inspection, General Manager inaugurated technical facilities and the newly constructed electrical substation apart from the renovated Meeting Room. Various types of coaches and innovations kept on display



were also inspected.

General Manager inspected and took a short ride in the century-old vintage Steam loco EIR-21. Southern Railway had conducted several heritage runs with EIR-21 hauled Special train, the latest run being operated between Chennai Egmore – Kodambakkam to commemorate Independence Day 2019. EIR-21, the world's oldest working steam engine is kept in working condition at the Perambur Loco Workshop.

At the end of the inspection, a Power Point Presentation was made briefing the General Manager on various achievements of Loco Works, Perambur. General Manager lauded the Officers and Staff of Loco works for their dedication and good work and announced suitable awards for meritorious personnel.

Perambur Loco works was established during the year 1932 for Steam locos and traveling steam cranes initially. The workshop expanded its operations to include Periodic Overhauling of various types of Diesel and AC locos, DEMU rakes, tower wagons, LHB bogies and Intermediate Overhauling of ICF bogies. Apart from EIR-21, the workshop has been overhauling heritage Steam loco EIR-22 and keeping the same in working condition.

## Asian Granito India Ltd's Rs. 224.65 crores Rights Issue to open on September 23

Chennai, September 09 2021: Asian Granito India Limited (AGIL), manufacturer of one of India's leading tiles brand is scheduled to open its Rights Issue on September 23, 2021. The funds raised through the Issue will be used to repay or prepay certain outstanding borrowings, meeting working capital requirements for the company's business activities and for general corporate purposes. Right issue are offered at a price of Rs. 100 per Share - 40% discount to current share price of Rs. 166 per share on September 3. Rights Issue closes on October 7, 2021. The Company will issue 2,24,64,188 fully paid-up Equity Shares of face value of Rs. 10 each for cash at a price of Rs. 100 per Equity Share aggregating to Rs. 224.65 crore on a rights basis to eligible equity shareholders in the ratio of 19:29.

Commenting on the development, Kamlesh Patel, Chairman and Managing Director, Asian Granito India Ltd said, "Company has taken many important initiatives in the recent past with a focus to reduce debt, strengthen the core business of tiles and building materials with an aim to moving towards asset light and capital light business model. Proceeds of the issue will further strengthen company's balance sheet, reduce debt and help fund its strategic growth initiatives. With all these measures, company may become debt free on a standalone basis in the current financial year itself."

The Promoter & Promoter Group shareholders, have confirmed their participation of up to Rs. 58.68 crore. Certain Promoter and Promoter group shareholders have also indicated that, in case the rights issue is undersubscribed, they reserve the right to subscribe to part or the whole amount of the unsubscribed portion, subject




to applicable laws. Post the rights issue, total outstanding shares of the company should increase to 5,67,51,634 equity shares from 3,42,87,446 equity shares as on June 2021. Lead Managers to the rights issue are Holani Consultants Private Ltd and BOI Merchant Bankers Ltd. The company plans to become debt free in the next 2-3 years on a consolidated basis. The company has reduced its overall consolidated debt by about Rs 35 crores, resulting in debt equity ratio improving to less than 0.5 times. In August 2021 company divested its entire 18.87% stake in its associated company - Astron Paper and Board Mills Ltd (Astron Paper) for Rs. 46.94 crores to focus on core business of tiles and building materials. Proceeds from the sale of Astron Paper shares to be utilized to meet long term working capital and business development of Asian Granito India Ltd.

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction